அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 20 /2024

எனது இல : F/FR/03/GBR/Circular
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07.

2024.12.18

அமைச்சுக்களினது செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்

**அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகைகள் "20.02.01.01" தொடர்பான வருமான நிலுவை அறிக்கைகளை சமர்ப்பித்தல் – 2024.12.31**

அரச நிதிக்கொள்கைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் 01/2015 மற்றும் 2015.07.20 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு (இதனை https://www.treasury.gov.lk/api/file/9b53869c-39ec-48b9-a16b-609a0e01a9e5 மூலம் தரவிறக்கம் செய்ய முடியும்) மற்றும் அதன் திருத்தங்கள் தொடர்பில் உங்களின் கவனத்தை செலுத்துகின்றேன்.

02. பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வருமான கணக்கீட்டு அலுவலராக பணியாற்றும் வருமான குறியீட்டிலக்கம் 20.02.01.01 ஐ கொண்ட "அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகைகளின் வருமானங்களை" திரட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டு அலுவலர்கள்/ கணக்கீட்டு அலுவலரினால், நி.பி.128(2) (இ) ஏற்பாடுகளின் பிரகாரம் அவ் வருமான குறியீட்டு இலக்கத்துக்குரியதாக ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வருமானம் தொடர்பான அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

03. ஆதலால், 20.02.01.01 எனும் "அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீட்டு வாடகைகள்" வருமானக் குறியீட்டிலக்கத்தின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக பேணப்பட்ட நிலுவை வருமானங்கள் தொடர்பான கணக்கு புத்தகங்களை உரிய முறையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரச நிதிக்கொள்கைகள் சுற்றறிக்கை இல. 01/2015படி இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் இல .01 இன் பிரகாரம் 2024.12.31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வருமான நிலுவை அறிக்கைகள் 2025.01.15ஆந் திகதிக்கு முன்னர் "buildingrentpubad@gmail.com" எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மென் பிரதியுடன் இவ் அமைச்சின் "பிரதான நிதி அலுவலரிடம்" சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு குறித்த திகதியில் வருமான நிலுவை எதுவும் இல்லாதிருப்பின் அது தொடர்பில் குறிப்பிட்டு வெற்று அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேலும், ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய வருமான நிலுவைக்கு நேரொத்ததாக 2024 ஆண்டிற்குள் அறவிடப்பட்ட தொகை தொடர்பான விபரங்களுடன், அதற்கு மேலதிகமாக அக்கால எல்லையினுள் நி.பி.113 இன் பிரகாரம் திறைசேரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் படி கைவிடப்பட்ட வருமான நிலுவை இருப்பின் அது தொடர்பான விபரங்களும் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் 02 இற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும் என மேலும் தயவுடன் அறியத்தருகின்றேன்

ஒப்பம்./ எஸ்.ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
தொலைபேசி :- 0112-691015
தொலைநகல் :- 0112- 683131
மின்னஞ்சல் :- fin.report.pubad@gmail.com

பிரதிகள் :- 1. கணக்காய்வாளர் நாயகம்

2. பணிப்பாளர் நாயகம், அரச நிதிக்கொள்கைகள் திணைக்களம்

# 2024.12.31 ஆந் திகதியளவில் வருமான நிலுவை தொடர்பான அறிக்கை

(i) நியதிச்சட்டம் / அதிகாரம் :- தாபன விதிக்கோவை / காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் / அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 20/2024

(ii) சட்டம் / அதிகாரம் :- பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

(iii) வருமான வகை :- அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளிலிருந்தான வாடகை வருமானம்

(iv) வருமானப் குறியீட்டு இலக்கம்:- 20.02.01.01

| விபரம் (அரசாங்க கட்டிடங்களின் வாடகை வகைப்படுத்தல்) | வருமான நிலுவை | | | | | நிலுவைக் கான கரணம் | நிலுவை அறவீடு தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கை கள் | நிலுவை அறவீடுகளை மீள அறவிடுவது தொடர்பாக |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 31.12.2021 வரையான திரட்டிய நிலுவைத் தொகை ரூபா | 2022 ஆண்டிற்கான திரட்டிய நிலுவைதொகை ரூபா | 2023 ஆண்டிற்கான திரட்டிய நிலுவைதொகை ரூபா | 2024 ஆண்டிற்கான திரட்டிய நிலுவைதொகை ரூபா | 31.12.2024 ஆந் திகதி வரையான மொத்த நிலுவைத் தொகை ரூபா (2+3+4+5) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | *(7) | *(8) | *(9) |
| (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் | | | | | | | | |
| (ii) சுற்றுலா பங்களாக்கள் / விடுமுறை விடுதிகள் | | | | | | | | |
| (iii) வர்த்தக கட்டிடங்கள் | | | | | | | | |
| (iv) களஞ்சிய சாலைகள் | | | | | | | | |
| ( v) ஏனையவை (சிற்றூண்டி சாலை,கேட்போர் கூடம், ஏனைய கட்டட வாடகை அல்லது குத்தகை வருமானம்) | | | | | | | | |

2024.06.30 ஆந் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்ட வருமான நிலுவை அறிக்கை மூலம் மேற்படி அட்டவணையின் நிரல் இலக்கம் 2 இருந்து 4 வரை அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு வருமான நிலுவைகளிலிருந்தும் 2024 ஆண்டிற்குள் அறவீடுகள் இருப்பின், அவை கழிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கப் பெறும் தொகையுடன் இந் நிரல்களின் கீழ் காட்டப்படும் கூட்டுத்தொகையும் சமமானதாக இருத்தல் வேண்டும். அவ்வாறின்றேல், குறித்த வித்தியாசங்கள் தொடர்பான விரிவான விளக்கம் இணைப்புக்களாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும

* 7,8 மற்றும் 9 ஆம் நிரல்கள் தொடர்பாக செல்லுபடியாகும் திவான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படுவது இன்றியமையாததாகும். அதற்காக மாதிரிப்படிவத்திலுள்ள இடவசதிகள் போதாதுவிடின் இணைப்பாக சமர்ப்பிக்கப்படுவது தகுந்ததாகும்.

குறிப்பு - வருமான நிலுவை காண்பிக்கப்படும் போது மேற்படி வகைப்படுத்தலின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்கு அவதானம் செலுத்தவும்.

திகதி- ..............................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்

.................................................................................

செயலாளர்/ திணைக்களத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்

(உத்தியோபூர்வ முத்திரை)

**2024.12.31 ஆந் திகதியளவில் வருமான நிலுவைகளின் திரட்டல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வருமான விடுவிப்பு ஆகியன பற்றிய கூற்று**

அமைச்சு / திணைக்களம் ……………………… வருமானத் தலைப்பு: 20.02.01.01

| விபரம் (அரசாங்க கட்டிடங்களின் வாடகை வகைப்படுத்தல்) | 2024 ஆண்டிற்கான வருமான நிலுவைத் திரட்டல் | | | | *2024 ஆம் ஆண்டிற்கான வருமான நிலுவைகளை விட்டு விடுதல்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 31.12..2021 வரையான திரட்டிய நிலுவைத் தொகை ரூபா | 2022 ஆண்டிற்கான திரட்டிய நிலுவை தொகை ரூபா | 2023 ஆண்டிற்கான திரட்டிய நிலுவை தொகை ரூபா | நிலுவைத் தொகைக்குரித்தான மொத்த திரட்டல்கள் (2+3+4) ரூபா | 31.12.2021 வரை | | 2022 | | 2023 | | நிலுவைத் தொகைக்கு ரியதான மொத்த விடுவிப்புக்கள் (6+8+10) ரூபா |
| | | | | | வருமான நிலுவைக்கு நேரொத்த விடுவித்தல்கள் ரூபா | நி.பி.113 பிரகாரம் விடுவிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி கடிதம் மற்றும் திகதி | வருமான நிலுவைக்கு நேரொத்த விடுவித்தல்கள் ரூபா | நி.பி.113 பிரகாரம் விடுவிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி கடிதம் மற்றும் திகதி | வருமான நிலுவைக்கு நேரொத்த விடுவித்தல்கள் ரூபா | நி.பி.113 பிரகாரம் விடுவிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி கடிதம் மற்றும் திகதி | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் | | | | | | | | | | | |
| (ii) சுற்றுலா பங்களாக்கள் / விடுமுறை விடுதிகள் | | | | | | | | | | | |
| (iii) வர்த்தக கட்டிடங்கள் | | | | | | | | | | | |
| (iv)களஞ்சிய சாலைகள் | | | | | | | | | | | |
| ( v) ஏனையவை (சிற்றூண்டி சாலை,கேட்போர் கூடம், ஏனைய கட்டட வாடகை அல்லது குத்தகை வருமானம்) | | | | | | | | | | | |

- மேற்படி வருமான குறியீட்டிலக்கத்தின் கீழ்வரும் ஏதேனுமொரு வருமானத்தினை விடுவிப்பதற்காக நி.பி..113 இற்கமைய பொதுத் திறைசேரியின் முன்னனுமதியைப் பெறவேண்டும். ஆதலால் , பொதுத்திறைசேரியினால் (அரசாங்க நிதித் திணைக்களம்) அதிகாரமளிக்கப்பட்ட விடுவிப்புக்களே இதன் கீழ் குறிப்பிடப்படுவதுடன் அது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட கடிதங்களின் ஒவ்வொரு பிரதியும் இத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

திகதி- …………………………… மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்

…...........................................................................................

செயலாளர்/ திணைக்களத் தலைவர்/ மாவட்டச் செயலாளர்

(உத்தியோபூர்வ முத்திரை)